முற்பகல் 9-50

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இல்லாது இருக்கிற, காலியாக இருக்கிற பணியிடங்களுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்கிற கருத்துரு பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இங்கே கேட்கப்பட்டிருக்கிற மூலக் கேள்வி, மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் கேட்டிருப்பது, நடுநிலைப் பள்ளிகளில் நாம் கைத்தொழில் பாடம் என்று வைத்து இருக்கிறோம், அந்தப் பாடத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தேர்வு உண்டா என்று கேட்டிருக்கிறார். தேர்வு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 222, திரு. வே. தம்புசாமி—இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் கேட்கிறார்.—மாண்புமிகு கல்வி அமைச்சர். இது திரு. வே. தம்புசாமியினுடைய தொகுதி சம்பந்தப்பட்டது.

222—

திருவாரூரில் பெண்களுக்குத் தனிக் கல்லூரி.

*1521 திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூர் நகரத்தில் பெண்களுக்கு தனிக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எத்தனை அரசு பெண்கள் கல்லூரிகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ? அதாவது 5,000-க்கு மேற்பட்ட பெண்கள் இருக்கிற ஒரு தொகுதியில்,...

1992 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் நீங்கள் கேள்வி கேட்கிறபோதே உங்களிடம் கேட்டேன். திருவாரூரில் பெண்கள் கல்லூரி ஆரம்பிப்பது பற்றிய கேள்வி இது. நீங்கள் கேட்பதற்கு அவரிடம் பதில் இருக்காது. தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா எண் 223. திரு. செ. து. வரதராஜன்—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

223—

மாசுக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடங்கள்.

*4496 திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாசுக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடங்கள் தமிழகத்தில் செயல்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் அவை இயங்குகின்றன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகங்கள் சென்னை, மதுரை, சேலம், மறைமலைநகர், அம்பத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இது தவிர, ஆறு நடமாடும் ஆய்வுக்கூடங்கள் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திண்டுக்கல், ஒசூர் மற்றும் மணலி போன்ற இடங்களில் இயங்கி வருகின்றன.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு நகரில் நான்கு புறங்களில் இருந்து சாலைகள் வந்து சேருகின்றன. தெற்குப் புறத்தில் சாராய பேக்டரியின் துர்நாற்றம் செங்கல்பட்டு நகரைத் தாக்குகிறது. வடக்குப் பகுதியில் லைட் ரூபிங் கம்பெனியினுடைய தார் சுடும் துர்நாற்றமும், குப்பைகளின் நாற்றமும் செங்கல்பட்டு நகரைத் தாக்குகின்றன. கிழக்குப் பகுதியில், கிளிஞ்சல் சுண்ணாம்பு சுடுவதும், மாட்டு இறைச்சியின் துர்நாற்றமும் செங்கல்பட்டு நகரைத் தாக்குகின்றன. மேற்குப் பகுதியில் எல். ஜி.